எனது இல. எம்.டி 1499
கல்வித் திணைக்களம்,
கொழும்பு 2.
1961.03.15

சகல பாடசாலைத் தலைவர்களுக்கும்,

**பாடசாலை பகிஷ்கரிப்பு**

01. பாடசாலைகளில் மீண்டும் கடினமாக ஒழுக்கத்தை கடைப்பிடிக்க வேண்டிய தேவையேற்பட்டிருப்பதை ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.
02. பாடசாலைகளில் பகிஷ்கரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவது மிகவும் மோசமான ஒழுக்கவீனமாக கருதப்படுகிறது. மேலும் பகிஷ்கரிப்புகளில் நேரடியாக சம்பந்தப்படுவோர் அல்லது ஒத்தாசை புரிவோர் அல்லது பொறுப்பானவர்கள் தொடர்பாக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.
03. இதன்பின் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு பாடசாலையை விட்டு வெளியேறிய எல்லா மாணவர்களும் பாடசாலையில் அவர்களது இடத்தை இழந்து விட்டவர்களாகவே கருதப்படுவதுடன் இது தொடர்பாக நடத்தப்படும் விசாரணைகளின் போது அம்மாணவர்கள் எவ்வித குற்றமும் அற்றவர்கள் என்று நிருபணமாகும் வரை மீளவும் பாடசாலைக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.
04. பின்வரும் நடவடிக்கைகளை பூரணப்படுத்தும் வரை பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட மாணவர்களை மீண்டும் பாடசாலைக்கு சேர்த்துக் கொள்ளாதிருக்க இத்தால் அதிபர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

அ. பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட அனைத்து மாணவர்களும் பாடசாலையில் அவர்களுக்குரிய இடத்தை இழந்துவிட்டதாக அறிவித்து பாடசாலைக்குள் வர அனுமதி வழங்காதிருக்கவும்.

ஆ. அம்மாணவர்கள் அவர்களின் விருப்பின் பேரில் வருகைப் பத்திரத்தினை பெற்றுச் செல்லலாம். மீண்டும் பாடசாலைக்கு அம்மாணவர்கள் வரவிரும்பினால் அவர்களது சொந்த தாய் தகப்பன் அல்லது பாதுகாவலருடன் சமூகமளித்து அவர்களது நடத்தை தொடர்பாக காரணம் காட்டுதல் வேண்டும். அந்த விளக்கம் பாடசாலைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாக இருப்பின், அம்மாணவ மாணவிகள் பாடசாலைக் கூட்டத்தில் பகிரங்க மன்னிப்பு கேட்டு அதன் பின்னர் இது போன்று எதிர்காலத்தில் நடந்துகொள்ள மாட்டேன் என்றும் பகிஷ்கரிப்பில் கலந்து கொண்டமைக்காக வருத்தம் தெரிவித்தும் பரிகாரம் செய்தல் வேண்டும்.

இ. இவ்வாறு செய்யாத ஏனைய எல்லா மாணவர்களுக்கும் அவர்களது வருகைப் பத்திரத்தில் விலகிச் செல்லக் காரணம் எனும் கூட்டினுள் “பாடசாலையை கைவிட்டுச் சென்றவர்” என்று குறித்து வழங்க வேண்டும்.

ஈ. பகிஷ்கரிப்பு தொடர்பான விசாரணைகளை கல்வி அதிகாரிக்கு அறிவித்தல் வேண்டும். பகிஷ்கரிப்பில் ஆசிரியர்கள் சம்பந்தப்பட்டிருப்பின் கல்வி அதிகாரி மூலம் அவர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

05. பிரச்சினைகளை முன்வைப்பதற்கோ அல்லது அது தொடர்பாக தீர்வுகளை எதிர்பார்ப்பதற்கோ சரியான வழிமுறை யாதெனில் பொருத்தமான முறையில் அவர்களாலேயோ அல்லது பெற்றார் ஆசிரிய சங்கங்கள் ஊடாகவோ நிருவாக அதிகாரியின் அவதானத்திற்கு கொண்டு வருவதேயன்றி பகிஷ்கரிப்பில் ஈடுபடுவதல்ல என்பதனை மாணவர்களுக்குப் புகட்டவும்.
06. இந்த சுற்று நிருப ஏற்பாடுகளை மாணவர்களுக்கும், பெற்றார் ஆசிரிய சங்கங்கள் ஊடாக பெற்றாருக்கும் அறியச் செய்யவும் இந்த சுற்று நிருபத்தினையும் இதனுடன் இணைந்துள்ள ‘எல்லா ஆசிரியர்களுக்குமான அறிவித்தல்’ என்ற பிரதியையும் உமது அறிவித்தல் பலகையில் ஒட்டி விடவும்.
07. இது தொடர்பாக பிரதான காரியாலயத்திற்கு எழுதப்படும் எல்லாக கடிதங்களும் உரிய நிருவாக பிரிவுக்கே அனுப்பப்படல் வேண்டும்.

**எஸ்.எப்.டி.சில்வா**
**வித்தியாபதி**